1974 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை காலை 9.28 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

(பேரவை மீண்டும் முற்பகல் பத்து மணியளவில் கூடியது)

(2) அரசினர் தீர்மானம்.

வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, " சட்டப் பேரவை விதி 22-ன் கீழ் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று இருப்பதை இன்று தள்ளி வைத்து நிகழ்ச்சிநிரலில் அடுத்துள்ள இனம் 2—' அறிக்கைகளை அளித்தல்' என்றுள்ளதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முன்மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

வெஸ்ட் கோஸ்ட் துரித இரயில் வண்டியை மாணவர்கள் நிறுத்தி அதிலுள்ள கேரள மாநிலப் பயணிகளைத் தாக்கியதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் எட் மண்ட், கே.டி.கே. தங்கமணி, மருதாசலம் ஆகியோர் '10–4–1974-ம் நாளன்று புதன்கிழமை மாலை சென்னை மத்திய இரயில் நிலையத்தி லிருந்து புறப்பட்டுச் சென்ற வெஸ்ட் கோஸ்ட் துரித வண்டியை சென்னை-அரக்கோணம் இரயில் நிலையங்களுக்கிடையில் சில மாண வர்கள் நிறுத்தி இரயில் பெட்டிக்குள் நுழைந்து அதில் பிரயாணம் செய்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த பிரயாணிகளையும், குறிப் பாகப் பெண்களையும் கன்னியர்களையும் தாக்கி அவர்களுக்குச்

சொந்தமான பொருட்களை எடுத்துச்சென்ற சம்பவம்பற்றி விவாதிக்க' என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்கது என்பதை மட்டிலும் சுருக்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

* **திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, "10—4—1974-ம் நாளன்று புதன்கிழமை மாலை சென்னை மத்திய இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற வெஸ்ட் கோஸ்ட் துரித வண்டியை சென்னை-அரக்கோணம் இரயில் நிலையங்களுக்கிடையில் சில மாணவர்கள் நிறுத்தி இரயில் பெட்டிக்குள் நுழைந்து அதில் பிரயாணம் செய்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த பிரயாணிகளையும், குறிப்பாகப் பெண்களையும், கன்னியர்களையும் தாக்கி அவர்களுக்குச் சொந்தமான பொருட்களை எடுத்துச் சென்ற சம்பவம் பற்றி விவாதிக்க" என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நேரத்திலே சமீப காலத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலேயே தமிழ்நாட்டிலே இரண்டு கேரளங்களை அனுமதிக்க மாட்டோம் என்று பொறுப்புள்ள முதலமைச்சர் அவர்கள் சொன்னபிறகு . . .

திரு. நா. வீராசாமி: தமிழ்நாட்டிலே என்று சொல்லவில்லை, தென்னகத்திலே என்றுதான் சொன்னார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: I stand corrected அப்படிச் சொன்னதற்குப் பிறகு தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏராளமாக நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

சில நாட்களுக்கு முன்னால் சென்னையிலே இருக்கிற கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சிறு கடை வைத்திருக்கின்றவர்களையெல்லாம் தாக்குகிற சம்பவம் நடந்திருக்கிறது. ரயிலிலே போகிற பயணிகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சம்பவம் நடைபெற்று இருக்கிறது. ரயிலை நிறுத்தி உள்ளே நுழைந்து தாக்கியிருக்கிறார்கள், அதிலே இருந்த கன்னியாஸ்திரிகளையும் பயணிகளையும் தாக்கி பொருட்களையெல்லாம் எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

1974 ஏப்ரல் 16] [திரு. க. உரா. எட்மண்ட்]

இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தக் காரியத்தைச் செய்தவர்கள் உண்மையிலேயே மாணவர்கள் தானா அல்லது மாணவர்களின் பெயரால் சில குண்டர்கள் அப்படிச் செய்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. யார் செய்தாலும் அதைக் கண்டிப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டிலே தடுத்தாக வேண்டும். ஏனென்றால் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் மராட்டிய மாநிலத்திலேயும் மற்ற மாநிலங்களிலேயும் மராட்டிய மாநிலத்தின் தலைநகரிலேயும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற சிவசேனையினரால் கொடுமைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அது தொடர்ந்து நடைபெறுவதற்குத் தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் வழிவகுக்கும். ஒவ்வொரு மாநிலமும் ஒன்றுக்கொன்று இணைந்திருக்க வேண்டும்.

நம்முடைய மாநிலத்திலே பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். நம்முடைய தமிழ் மக்கள் வேறு மாநிலங்களிலே பிழைப்புக்காகப் போயிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் பற்றி கேரள மாநிலத்திலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றனவென்று பத்திரிகையிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம்பற்றி விவாதித்து நல்ல முறையிலே தீர்வுகாண பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்து இருக்கக்கூடிய ஒத்திவைப்புத் தீர்மான நோட்டீஸ் வேறாக இருக்கிறது. "10—4—1974 சென்னையிலிருந்து புறப்பட்ட வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸில் மலையாளிப் பெண்கள் (கன்னிமாது உட்பட), ஆண்கள் அரக்கோணம் அருகே தாக்கப்பட்டு போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என கேரள முதலமைச்சருக்கு மகஜர் கொடுத்துள்ள அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயம்" என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 16

ஞாயிற்றுக்கிழமையன்று வந்த தினமணிப் பத்திரிகையிலே கிட்டத்தட்ட இதே விஷயங்கள்தான் வெளி வந்துள்ளன. அரக்கோணத்திற்கு முன்னாலே சில மாணவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் ரிசர்வ் கம்பார்ட்மென்டிலே புகுந்து பெண்களையும் மற்றவர்களையும் தாக்கியதாகவும், சில சாமான்களை எடுத்துவிட்டதாகவும் அதற்குப் பின்னாலே அவர்கள் கேரள முதலமைச்சருக்கு அதைப்பற்றி கம்ப்ளெண்ட் செய்ததாகவும் கேரளப் பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன.

இந்தச் சம்பவத்தைப்பற்றி கேரள மாநிலத்திலே சோஷலிஸ்ட் பார்டியைச் சேர்ந்த ஜான்மஞ்சூரன் என்பவரும் கங்காதரன் என்பவரும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அங்கே கேரள முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய செய்தியானது நமக்கெல்லாம் கொஞ்சம் கஷ்டம் கொடுக்கக்கூடியதாகத் தான் இருக்கிறது.

அந்தப் பிரயாணிகள் டெல்லியிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் டெல்லியிலிருந்து சென்னைக்கு வருகின்ற வரையிலே எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாமல் வந்திருக்கிறார்கள். ஆனால் சென்னையிலிருந்து கேரளாவிற்குப் போகின்றபோதுதான் அரக்கோணத்திற்கு முன்னாலே தாக்கப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

'Some people boarded the reserved compartment and begin to harass the passengers and even insult the womenfolk, including nuns.

The Chief Minister said he was not disputing the facts mentioned by the passengers in their memorandum. But the question was what more could be done at the governmental level ...'

என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். இதிலே பொறுப்பு இருவருக்குத்தான். ஒன்று இரயில்வேக்கு இருக்கிறது. இன்னொன்று நம்முடைய மாநில அரசுக்கு இருக்கிறது. இரயில்வே போலீஸ் என்று தனியாக அவர்கள் செயல்படுகிறார்கள், இருந்தாலும் நம்முடைய மாநில போலீசுக்கும் அதிகாரம் இருக்கிறது.

1974 ஏப்ரல் 16] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே சில செய்திகளைக் கொடுத்ததாகவும்

'The Tamil Nadu Chief Minister Karunanidhi told newsmen that enquiries with railway authorities had shown that they were not aware of any incident ...'

என்ற முறையிலே—பொதுவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இம்மாதிரி விஷயங்களையெல்லாம் சட்ட மன்றத்திலே தான் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பத்திரிகைக்குச் செய்தி கொடுத்ததாக வந்திருக்கிறது, அது உண்மையாக இருக்காது என்று நினைக்கிறேன்.

கேரள மாநில முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேறு மாநிலங்களிலே அவர்களுக்கு தொந்தரவு இல்லை, தமிழ்நாடு மாநிலத்திற்கு அவர்கள் வந்தவுடனே மலையாளிகள் என்ற நிலையிலே தொந்தரவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். சிவசேனையினர், பம்பாயிலே இருக்கின்றவர்களைத் தொந்தரவு செய்யக்கூடிய அப்படிப்பட்ட முறையிலே இருக்கிறது என்று தொனிக்கக்கூடிய காரணத்தினாலே அதையும் கவனிக்க வேண்டும்.

அதே நேரத்தில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இங்குள்ள சிறுபான்மையோருக்கு, மொழியில் சிறுபான்மையோராக இருந்தாலும், வேறு எந்த முறையில் சிறுபான்மையோராக இருந்தாலும் நாம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னதற்கு மாறுதலாக நடந்திருக்கிறது. ஆகவே, இதைப்பற்றிய ஒரு உத்தரவாதம் நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சம்பவத்தைப்பற்றிய முழு விவரங்களைப் பொறுத்தவரையில் இரயில்வே போர்டு அல்லது ரெயில்வே நிர்வாகஸ்தர்கள் எந்தவிதமான பொறுப்பும் இல்லாத வகையில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. பொறுப்புள்ள முதலமைச்சரவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். எனவே இப்படிப்பட்ட விஷயங்கள் இருப்பதால் சபையை ஒத்திவைத்து விவாதிப்பது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரயிலிலே சென்ற பிரயாணிகள் தாக்கப்பட்டார்கள் அல்லது இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்—நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவரவர்களும், நண்பர் திரு. எட்மண்ட் அவர்களும் எடுத்துச் சொன்னதைப்போல இம்சிக்கப்பட்டார்கள் என்கின்ற செய்திகள் பத்திரிகையிலே வந்தவுடன் நான் இரயில்வே போலீஸ் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு என்ன விஷயம் என்று கேட்டேன். அதைப்போலவே இரயில்வே ஜெனரல் மானேஜருடனும் தொடர்புகொண்டு அதுபற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

அவர்கள் அதுபோல எந்த நிலைமைகளும் எங்கும் ஏற்படவில்லை என்ற தகவலை எனக்குச் சொன்னார்கள். மறுபடியும் விசாரித்துச் சொல்லுங்கள் என்று ஜெனரல் மானேஜரையும், இரயில்வே டி.ஐ.ஜி. யையும் கேட்டுக்கொண்டேன். அவர்கள் மறுபடியும் விசாரித்து, அப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கும் நடைபெறவில்லை என்ற தகவலைத்தான் எனக்குச் சொன்னார்கள்.

நேற்று பத்திரிகை நிருபர்கள் என்னைக் கேட்டபொழுதுகூட நான், மேலும் தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். இதுவரையில் எனக்குக் கிடைத்த தகவல்களின்படி அரக்கோணத்திற்கு அருகாமையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே

தந்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்ற சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றுதான் தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது.

நிருபர்கள் கேட்டபொழுதுகூடச் சொன்னேன். மேலும் இதை விசாரித்து, தீர விசாரித்து எனக்கு அறிவிக்க வேண்டுமென்று நான் இரயில்வே போலீசாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன், ஜெனரல் மானேஜரையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

நம்முடைய திரு. கே. டி. கே தங்கமணி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, தமிழ்நாட்டில் இருக்கின்ற சிறுபான்மையோர் யாராலும் அவர்களுக்கு நிச்சயமாகப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதை இன்று அல்ல, நான் நெடுநாட்களுக்கு முன்பே இந்த அவையிலே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

இது மலையாளிகள் தமிழர்கள் என்ற பிரச்னை மட்டுமல்ல, வேறு பல பிரச்னைகள் சிறுபான்மையோரைப்பற்றி எழுப்பப்பட்ட நேரத்திலேயும் இந்த அறிவிப்பை தமிழக அரசின் சார்பாக நான் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். அப்படியே ஒருவேளை நடந்திருந்தாலும்—நடக்கவில்லை என்று தகவல்—நடந்திருந்தாலும் கூட அது பிரயாணிகளிடத்திலே சில குண்டர்கள் வம்பு செய்தார்கள் அல்லது திருட முயற்சித்தார்கள் என்ற அளவிலே எடுத்துக்கொள்ளவேண்டுமேயல்லாமல் நாமே வலிந்து மலையாளிகள் தமிழர்கள் என்ற அளவில் இந்தப் பிரச்னையைக் கொண்டுவிடுவது நல்லதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எட்மண்ட் அவர்கள், தென்னிந்தியாவிலே இரண்டு சேரள இராஜ்யங்கள் இருக்க முடியாது என்று நான் சொன்னது தான் இதற்கெல்லாம் காரணம் என்பதைப்போல் சொன்னார்கள்.

வெஸ்ட் கோஸ்ட் துரித இரயில் வண்டியை மாணவர்கள் நிறுத்தி அதிலுள்ள கேரள மாநிலப் பயணிகளைத் தாக்கியதாகக் கூறப்படுவது குறித்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 16

நான் தொடர்ந்து சொல்கிறேன், தென்னிந்தியாவிலே ஒரு கேரள இராஜ்யம்தான் இருக்க முடியும், இரண்டு கேரள இராஜ்யங்கள் இருக்க முடியாது என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே அதிலே பெரிய பிரச்னை இல்லை.

அதை வைத்துக்கொண்டு மலையாளிகள் தாக்கப்படுகிறார்கள் என்ற செய்தியை நாம் பரப்பிக்கொண்டிருந்தால் இது வெளி மாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்களுக்கு நம்மையறியாமலேயே தீங்கு செய்கிறோம் என்பதைப்போன்றுதான் பொருள்படும்.

வெளிமாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்கள் அங்கு சிறுபான்மை யோர் ஆவார்கள். அந்த மாநிலங்களில் இங்கிருந்து சென்ற தமிழர்கள் அடக்க உணர்வோடு நடக்க வேண்டும். அதைப் போலவே வெளிமாநிலங்களிலிருந்து இங்கு வந்திருக்கின்ற சிறு பான்மையோர் அடக்கமாக நடந்து கொள்ள வேண்டும். இந்த அடக்க உணர்வு என்பது ஒருவழிப்பாதை அல்ல. அனை வருக்கும் பொதுவானது என்ற உணர்வோடு நடக்க வேண்டும்.

கேரள முதல்வரவர்கள் கடிதம் எழுதியிருப்பதாக அந்த அவை யிலே தெரிவித்திருக்கிறார்கள். இதுவரையில் எனக்கு அது வர வில்லை. தமிழ்நாட்டில் நடந்த வேறொரு கொலை வழக்கைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அதை விசாரித்துப் பதில் எழுத இருக் கிறேன். கொலைகூட அல்ல, தற்கொலைச் செய்தியைப்பற்றி. வேறு கடிதம் எதுவும் எனக்கு வந்து சேரவில்லை. வந்து சேர்ந் தால் அந்தக் கடிதத்தின் பொருளைப் படித்துப் பார்த்து, ஏற்ற நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பேன் என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

தகவல்கள் இரயில்வே இலாக்கா அதிகாரிகளிடத்திலிருந்தும், மானேஜரிடத்திலிருந்தும் கிடைத்திருக்கின்ற காரணத்தினாலேயே இதை இத்துடன் விட்டு விடுவோம் என்று அர்த்தம் அல்ல.

மேலும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதால், விசாரித்தறிந்து ஏற்ற நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியை இந்த அவைக்கு நான் தெரிவித்து, இந்த அளவில் இதை விவாதித்துவிட்ட காரணத்தினால் மேலும் இதுபற்றி விவாதிக்கத் தேவையில்லை என்பதை, தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

அடுத்து, 41-வது விதியின்கீழ் இந்த அறிக்கைகளை எடுத்துக் கொள்ளலாமா? 41-வது விதியின் கீழ் அறிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று சிலர் கருத்துச் சொன்னார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

THIRU N. GANAPATHY : Sir, I present the Report of the Committee on Public Undertakings on the Accounts of the Public Undertakings contained in the Report of the Comptroller and Auditor-General of India for the year 1970–71.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவின் "பத்திரப் பதிவுத் துறை" குறித்த அறிக்கை.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimate on the Registration Department.